சார்பு நீதிமன்றம், குளித்தலை

MCOP NO. **83 / 2016**

பெயர்: செல்வராணி ம.சா. 1 தேதி **03.12.2024**

2வது எதிர்மனுதாரர் த ரப்பில் குறுக்கு விசாரணை

நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை. எனது சித்தப்பா தான் தகவல் கொடுத்தார். விபத்தில் இறந்துபோனது எனது அப்பா. மேற்படி விபத்து சம்பந்தமாக வேறு நீதிமன்றங்களில் சாட்சியம் அளித்தது இல்லை. முதல் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டி வாகனத்தை மெதுவாக தான் கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி வந்தார் என்றாலும் எனது தகப்பனார் தான் சாலையில் வாகனம் வருவதை கவனிக்காமல் சாலையை கடந்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி விபத்து நடைபெற்றதற்கு எனது தகப்பனார் தான் காரணம் என்றால் சரியல்ல. மேற்படி விபத்து சம்பந்தமான ஆவணங்களான முதல் தகவல் அறிக்கை, மோ.வா.அறிக்கை ஆகியவற்றில் ஓட்டுநர் பெயர் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். முதல் எதிர்மனுதாரர் வாகனமானது சுமார் 4 அரை மாதங்கள் கழித்து ஆய்வுக்கு அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதல் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநருக்கு வாகன ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரியல்ல. மலையம்மாள் (4ம் மனுதாரர்) எனது பாட்டி. 4ம் மனுதாரருக்கு வேறு வாரிசுகள் உள்ளார்கள். மேற்படி வாரிசுகளை இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். எனது தகப்பனார் மாதம் ஒன்றுக்கு ரூ. 15,000 சம்பாதித்து வருவதாக கூறுவது உண்மையில்லை என்றால் சரியல்ல. எனது திருமணம் ஆகி 15 வருடங்கள் ஆகிவிட்டது. நானும் மற்ற மனுதாரர்களும் எனது தகப்பனாரின் வருமானத்தை நம்பி வாழவில்லை என்றால் சரியல்ல. முதல் எதிர்மனுதாரரின் கவனக்குறைவால் விபத்து நடைபெறவில்லை என்பதால் தான் மேற்படி குற்ற வழக்கான முடிவுக்கு வரவில்லை என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள தொகையான மிகையானது என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரர் எந்தவித இழப்பீடும் கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/-(ஈ.முத்துசாமி)
சார்பு நீதிபதி
குளித்தலை.